**இலங்கை மின்சா சபை ஊழியர் சேமலாப நிதியம் - 2021**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை மின்சா சபை ஊழியர் சேமலாப நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் கூற்று விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1321/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமாணியின் 23(iii) ஆம் பிரிவு, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்திலுள்ள (நியதிச்சட்ட நிதியங்களுக்கு மாத்திரம்) ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

2021 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.]

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்குகளை வைத்திருத்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகத்துடன் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான

வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியம் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்குடன் இணங்காமை

| உரிய கணக்கீட்டு நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| இலங்கை கணக்கீட்டு நியமங்கள் எல்லை பிரமாணம் 2020 – கணக்கீட்டு நியமங்களால் வழங்கப்பட்ட நிதி அறிக்கையிடலிற்கான எண்ணக்கரு கட்டமைப்பின் பிரகாரம், அறிக்கையிடல் பதிவுக்கு உட்படுத்தப்பட்ட சகல செலவினங்கள் மற்றும் சொத்துக்கள் முழு அறிக்கையும் நிதிக்கூற்றுக்களில் பதியப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்காக சேமலாப நிதியத்திற்கு நேரடி காரணமாக இருந்த ரூபா 53,639,207 தொகையான செயற்பாட்டுச் செலவினம் நிதிக் கூற்றுக்களில் அடையாளங்கண்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2003 திசெம்பர் 31 இல் வெளியிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதிய விதியின் 20(i) ஆம் உட்பிரிவை தொடர்ந்து வீடமைப்பு கடன்களின் களப் பரிசோதனை தொடர்புபட்ட செலவினங்களை தவிர நிதியத்தின் சகல நிர்வாகச் செலவினங்களும் இலங்கை மின்சார சபையால் ஏற்கப்பட்டதுடன் இந்தக் கொள்கை நிதியத்தின் தொடக்கத்திலிருந்து இருந்தது. (1969 நவம்பர் 1 இலிருந்து). ஆகவே, ஊழியர் சேமலாப நிதியம் சார்பில் இலங்கை மின்சார சபையால் ஏற்பட்ட செயற்பாட்டுச் செலவினங்கள் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மேலும், இலங்கை மின்சார சபை ஊழியர் சேமலாப நிதியத்தின் முகாமைத்துவக’ குழுவிற்கு இந்த விடயம் சமர்ப்பிக்கப்படுகையில் சபையால் முகாமைத்தவ மற்றும் நிர்வாக செலவினம் ஏற்படுவது தற்போதைய நடைமுறையாக தொடருவதற்கு 2021 பெப்ரவரி 11 மற்றும் 2022 மே 26 இல் நடைபெற்ற கூட்டத்தில் குழு தீர்மானித்ததுடன் இலங்கை மின்சார சபையானது சபையால் நிதியத்தின் முகாமைத்துவ மற்றும் நிர்வாக செலவினம் ஏற்படுவது தற்போதைய கொண்கையாக தொடருவதற்கு விடயங்களின் விபரங்களை கருத்திற்கொண்டு அனுமதித்திருந்தது. | |

### 1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதியம் மற்றும் இலங்கை மின்சார சபையின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலம் மீளாய்வாண்டின் போது 7 ஆண்டுகள் முதல் 14 ஆண்டுகள் வரை மாற்றப்பட்டிருந்தது. அவர்களுடைய வாகனங்களிற்காக நிதியத்தின் நிதிக்கூற்றில் பொருந்தக் கூடிய முன்னைய சீராக்கலாகவிருந்த பெறுமானத் தேய்வு அளவு ரூபா 3.6 மில்லியன் தொகையாகும். எவ்வாறாயினும், மோட்டார் வாகனங்களின் பயன்பாட்டுக் கால மாற்றம் மற்றும் அதன் பெறுமானத் தேய்வுக் கொள்கை நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல 3.3.3 இல் முறையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறிப்பு இல். 3.3.3 இன் பிரகாரம், ‘‘பயன்பாட்டக் காலம் முறையான பெறுமதிகள் மற்றும் பெறுமானத் தேய்வு முறை ஒவ்வொரு நிதியாண்டிலும் முறைப்படி சீராக்கப்பட்டிருக்குமாயின்’’ மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். வேண்டப்படுமாயின் மேலதிக தகவல் அடுத்துவரும் நிதிக்கூற்றில் வெளிப்படுத்த முடியும். | வேண்டப்பட்ட தகவல்கள் பயன்பாட்டாளர்களின் புரிந்துணர்விற்காக நிதிக் கூற்றில் வெளிப்படுத்த வேண்டும். |

### 1.6 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பதவி வறிதாக்கப்பட்ட அல்லது அகற்றப்பட்ட உறுப்பினர்களிற்கு சொந்தமான ரூபா 72,039,691 தொகை பல ஆண்டுகளாக நிலுவையாகவிருக்கின்றதுடன் அதில் | நிதியத்தின் விதியானது இறுதி கொடுப்பனவுகளிற்கு ஆவணங்களை சமர்ப்பிபதற்கு ஏற்றுக் கொண்டுள்ள உறுப்பின்களிற்குள் ஆகக்குறைந்த காலப்பகுதி குறிப்பிட்டிருக்கவில்லை. | பதவி வறிதாக்கப்பட்ட அல்லது அகற்றப்பட்ட உறுப்பினர்களின் இறுதி தீர்ப்பனவிற்காக பொறிமுறையொன்று |

| | | | |
|---|---|---|---|
| அந்த தொகை ஆறு ஆண்டுகளிற்கு மேலாக ரூபா 63,032,304 ஆன தொகை நிலுவையாக இருந்தது. | ஆகவே, நிதியம் தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுகின்ற போது அந்த நிதிகளை விடுவிப்பதற்கு இன்னமும் பொறுப்பாக உள்ளதுடன் நிதிக் கூற்றுக்களிலிந்து பதிவழிக்க முடியாதிருந்தது. | தாபிக்கப்பபட வேண்டும். | |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை மின்சார சபை ஊழியர் சேமலாப நிதிய பிரமாணங்கள் | | | |
| (i) விதி 4 – வருமானங்கள் | இந்த ஏற்பாடுகளிற்கு முரணாக நிதியத்தின் பங்களிப்புகு கணிப்பீடுகளில் இலங்கை மின்சார சபை வருமானங்களாக படிகளில் வெளியேறுதல் படி, பட்டப் பின்படிப்பு படி, மற்றும் தொழில்சார் படி/ அரைப்-பட்டப் பின்படிப்பு படி போன்ற உயர்ந்த படியை கொண்டிருந்தது, | சேமலாப நிதிய பங்களிப்பு கணப்பீடு செய்யும் போது உயரர்ந்த படி, (வெளியேறுதல் படி, பட்டப்பின்படிப்பு படி, மற்றும் தொழில்சார் படி வெளியேறுதல் படி, பட்டப்பின்படிப்பு படி, மற்றும் தொழில்சார் படி போன்றவற்றிற்கிடையில்) 2007 ஒக்தோபர் 23 ஆந் திகதிய DGM(P)/Policy/GS(1)/181 ஆம் இலக்க ஆளனிச் சுற்றறிக்கைக்கு அமைய திரண்ட சம்பளங்களின் ஒரு பகுதியை கொண்டிருந்தது. | ஊழியர் சேமலாப நிதியப் பிரமாணங்களுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (ii) விதி 22 – உறுப்பினர்களிற்கு பங்கிலாபம் | • இந்த ஏற்பாடுகளிற்கு முரணாக முன்னைய ஆண்டு இறுதியில் இருக்கின்ற மீளாய்வாண்டு இறுதியில் இறுக்கின்ற உறுப்பினர்களுடைய செலவு மீதிக்குப் பதிலாக உறுப்பினர்களுடைய செலவு மீதி அடிப்படையில் செலுத்தப்பட்டது.<br>• இந்த ஏற்பாடுகளிற்கு முரணாக சில செலவுகளை கழிப்பதற்கு முன்னரான வருமானத்தின் அடிப்படையில் கணிப்பீடு | • ஓய்வுபெற்றிருந்த உறுப்பினர்களின் கடந்த ஆண்டு பங்களிப்பிற்காக பங்கிலாபம் திரட்டப் பட்டிருந்தது ஆகவே, விதி என் 22 அல் வழங்கப்பட்ட அறிவுறுத்தலிற்கு இணங்கியுள்ளது.<br>• ஒதுக்கங்களை ஒதுக்கிய பின்னர் மற்றும் நிதியத்திற்கு சாட்டுதல் செய்யக்கூடிய ஏதாவது செலவினை | ஊழியர் சேமலாப நிதிய பிரமாணங்களுடன் இணங்கியொழுக வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டு ஒதுக்கங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | கழித்த பின்னர் முறையாக பங்கிலாப கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | |
| (ஆ) இலங்கை சனநாய சோசலீச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் (FR} | | | |
| (i) நிதிப்பிரமாணம் 454(1) | நிதியத்தால் பயன் படுத்தப்பட்ட 42 பொருளிருப்பு விடயங்கள் தொடர்பான பொருளிருப்பு பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. | நிதியத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ஒவ்வொரு பொருளிருப்பு விடயமும் நிதியத்தின் பொருளிருப்பு பதிவேட்டில் பதியப்பட்டுள்ளதுடன் மேற்குறிப்பிட்ட 42 பொருளிருப்பு விடயங்கள் இலங்கை மின்சார சபையால் கொள்வனவு செய்யப்பட்டது. ஆகவே, நிதிய பொருளிருப்பு பதிவேட்டில் பதியப் பட்டிருக்கவில்லை ஆனால், அவை இலங்கை மின்சார சபையின் பொருளிருப்பு பதிவேட்டில் முறையாக பதியப்பட்டுள்ளது. | நிதியத்தால் பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு பொருளிருப்பு விடயங்களிற்கும் நிதியம் பொருளிருப்பு பதிவேடுகளை பேணப்பட வேண்டும். |
| (ii) நிதிப்பிரமாணம் 396 | 2021 சனவரி முதல் யூன் வரை எழுதப்பட்ட ரூபா 5,605,806 கூட்டுத் தொகையான காசோலைகள் 2021 ஆகஸ்ட் 31 வரை மாற்றப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், உத்தரவாத காலப்பகுதி காலாவதியாகியிருந்த அந்த காசோலைகளிற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முதலில், உங்களுடைய அறிக்கையில் குறிப்பிடப்பட்ட சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் மொத்தம் எங்களுடைய பதிவேடுகளுடன் சமப்படவில்லை, ஆனால் ரூபா 4,378,257.94 தொகையான காசோலைகள் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டதுடன் காலாவதியாகியிருக்கின்ற காசோலைகளை இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | கணக்காய்வாளருய பட்டியல் வங்கி கூற்றுடன் சமப்படுவதுடன் அந்த சகல காசோலைகளும் 2022 ஆகஸ்ட் வரை சமர்ப்பிக்கப்பட்டோ அல்லது இரத்து செய்யப்பட்டோ இருக்கவில்லை. ஆகவே, நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,474,724,389 ஆன இலாபமாக இருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நேரொத்த இலாபம் ரூபா 6,294,668,211 ஆகும். ஆகவே, நிதிசார் விளைவுகளின் ரூபா 819,943,822 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் போது ஏனைய செயற்பாட்டு செலவினங்களின் அதிகரிப்பு மற்றும் வட்டி மற்றும் ஏனைய வருமானங்களின் வீழ்ச்சி என்பனவே வீழ்ச்சிக்கான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வானது அதிகரிப் அல்லது வீழ்ச்சி பின்வருமாறுள்ளன.

| வருமானம் / செலவினம் | 2021 | 2020 | அதிகரிப்பு) / (வீழ்ச்சி) | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா. | % |
| வட்டி வருமானம் | 5,475,285,041 | 6,290,686,206 | (815,401,165) | (12.9) |
| ஏனைய வருமானம் | 5,392,150 | 7,880,288 | (2,488,138,) | (31.57) |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 5,952,802 | 3,898,283 | 2,054,519 | 52.7 |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளிற்கான சில முக்கியமான விகிதங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| விகிதம் | 2021 % | 2020 % |
|---|---|---|
| தேறிய இலாப வீதம் | 85.26 | 84.61 |
| சாரசரி முதலீடு மீதான வருமான வீதம் | 8.44 | 10.62 |
| உறுப்பினர் மீதி மீதான வருமான வீதம் | 6.59 | 8.23 |

நிதியத்தின் தேறிய இலாப வீதம் 2020 ஆண்டிலுள்ள 84.61 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் 85.26 சதவீதத்தை பதிவுசெய்திருந்தது. எவ்வாறாயினும் சாரசரி முதலீடு மீதான வருமான வீதம் முதலீடுகள் மீதான வட்டி வீதங்களின் வீழ்ச்சி காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொது 10.62 சதவீத்திலிந்து 8.44 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. நிதியத்தின் உறுப்பினர் மீதிகள் மீதான வருமான வீதம் முதலீடுகள் மீதான வருமான வீழ்ச்சி காரணமான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 8.23 சதவீத்திலிந்து 6.59 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலமைக் கூற்றில் நடைமுறை சொத்தின் கீழ் பதிவுசெய்திருந்த ரூபா 2,157,483,000 தொகையான முதலீடுகளிலிருந்து பெற வேண்டியவைகளின் அறவீட்டுத் தன்மை அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பான | அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு, வழக்கு செயற்பாட்டில் உள்ளதுடன் நிதியத்தின் வருடாந்த வருமானக் கூற்றின் ஊடாக ஏற்பாடு செய்யப்படுகின்ற சொல்லப்பட்ட முதலீடு மீதான எந்தவொரு கடனழிப்பு நட்டங்களிற்கு எதிராக முதலீட்டு ஒதுக்கம் | நிலுவையாவிருக்கின்ற முதலீட்டு மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சான்றுகள் இன்மையால் ஐயத்திற்கிடமாக உள்ளதுடன் ஆரம்ப வாடிக்கையாளக ளிடமிருந்து (என்ரஸ்ட் செக்குரிட்டிஸ் பீஎல்சீ) எவ்வித உறுதிப்படுத்தல்களும் பெறப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், இலங்கை மின்சார சபையின் முகாதைத்துவம் அந்த வழக்கு தொடர்பில் 2015 திசெம்பர் 09 இல் என்ரஸ்ட் செக்குரிட்டிஸ் பீஎல்சீ இற்கு எதிராக FCID இல் முறைப்பாடு செய்திருந்ததுடன் இலங்கை மின்சார சபையின் ஊழியர் சேமலாபத்திற்கு உடமையான நிதிகளின் தவறான பயன்படுத்தலிற்காக மாவட்ட நீதி மன்றத்தில் கிறிமினல் வழக்கு தொடரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த வழக்கு மீளாய்வாண்டு இறுதிவரை இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை. | உருவாக்கப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 இறுதியில் ஒதுக்கம் ரூபா 2,157,483,000 ஆக இருந்தது.<br><br>மேலும், நிதியமானது முகப் பெறுமதி மற்றும் சொல்லப்பட்ட முதலீட்டிற்கான அவற்றின் பிற்போட்ட கூப்பன் வட்டிக் கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு DMR/1405/2018 ஆம் வழக்கின் கீழ் கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில் என்ரஸ்ட் செக்குரிட்டிஸ் பீஎல்சீ இற்கு எதிராக சில வழக்கு தொடங்கியிருந்தது. | |
| (ஆ) | சபை தொடங்கியதிலிருந்து இருந்த ரூபா 2,167,354 தொகையான அரச சேவை சேமலாப நிதிய ஒதுக்கம் முறையான அனுமதி இல்லாமல் இலங்கை மின்சார சபை பங்களிப்பிற்கும் (15% உறுப்பினர் பங்களிப்பிற்கும் (10%) மாற்றப்பட்டிருந்தது. | புதிய முறைம வடிவமைப்பின் கீழ் பொறுப்புகளிற்கு எவ்வித மாற்றங்களும் செய்யப்பட்டிருக்காது இலங்கை மின்சார சபை பங்களிப்பிற்கும் (15% உறுப்பினர் பங்களிப்பிற்கும் (10%) வகுதிகளிலுள்ள அரச சேவை சேமலாப நிதிய (PSPF) மீதிகள் மாற்றுவதற்கு வேண்டப்பட்டது. | ஒதுக்கத்தை மாற்றுவதற்கு முகாமைத்துவக் குழுவின் அனுமதி பெறப்பட வேண்டும். |